RNI-NO: TNTAM/2021/83936





# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை | மலர்-4 | இதழ்- 161 | ஜூன்.16, 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## தமிழகத்தில் விரைவில் எம்பிபிஎஸ் கலந்தாய்வு தொடக்கம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

கோவை: ஜூன்.16-

தமிழகத்தில் எம்பிபிஎஸ் மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வு விரைவில் தொடங்கும் என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதல்நிலை செயற்கை கருத்தரிப்பு மையம், வளர்ச்சி குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும் 'சோமாட்ரோகான்' மருந்து வழங்குதல் உள்ளிட்ட 4 திட்டங்களின் தொடக்க விழா நேற்று நடைபெற்றது.

விழாவில் பங்கேற்ற அமைச்சர் மா.சுப்பிரமணியன், செய்தியாளர்களிடம் கூறியதாவது: புற்றுநோயை துல்லியமாகக் கண்டறியும் 'பெட் சிடி ஸ்கேன்' தமிழகத்தில் 4 இடங்களில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோவை மருத்துவமனையில் ரூ.16.30 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள முதல்நிலை செயற்கை கருத்தரிப்பு மையம் மூலம் 180 பெண்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் இருவர் கருவுற்றுள்ளனர்.

இந்த அமைப்பு முழு பயன்பாட்டுக்கு வரும்போது நூற்றுக்கணக்கான பெண்கள் செயற்கை கருத்தரித்தல் மூலம் கருவுறும் நிலை ஏற்படும். தமிழகத்தில் வளர்ச்சி குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க 'சோமாட்ரோகான்' மருந்து வழங்கும் திட்டம் ரூ.13.28 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் ஒரு குழந்தைக்கு 5 வாரத்துக்கு ரூ.60 ஆயிரம் மதிப்பில் மருந்து வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் நீட் தேர்வு விலக்கு பெற வேண்டும் என்பதற்காக தொடர்ந்து சட்டப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டு தமிழகத்தைச் சேர்ந்த 1,35,715 பேர் தேர்வெழுதினர். இதில் 76,181 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். தகுதி பெற்றவர்களுக்கு இடம் கிடைக்காவிட்டாலும், முன்னுரிமை பெறுவார்கள். நாடு முழுவதும் முதல் 100 இடங்களில் தேர்ச்சி பெற்றவர்களில் தமிழகத்தைச் சேர்ந்த 6 பேர் இடம்பெற்றுள்ளனர்.

எம்பிபிஎஸ் மருத்துவப் படிப்புக்காக 32 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. நீட் மதிப்பெண் அடிப்படையில், தேசிய தேர்வு மையம், தமிழ்நாடு மருத்துவ தேர்வுக் குழு வழிகாட்டுதலின் பேரில் விரைவில் மருத்துவக் கலந்தாய்வு தொடங்கப்படும்.

நீட் தேர்வில் தேர்ச்சி பெறத் தவறிய மாணவர்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கும் திட்டம் சென்னையில் இன்று (ஜூன் 16) தொடங்கி வைக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில், சுகாதார துறைச் செயலர் செந்தில்குமார், ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தொடர்ந்து, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் இஎஸ்ஐ மருத்துவமனைகளில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு, மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

# காவிரி டெல்டா பாசனத்துக்காக கல்லணையில் இருந்து தண்ணீர் திறந்தார் முதல்வர் ஸ்டாலின்

தஞ்சாவூர், ஜூன்.16-

காவிரி டெல்டா மாவட்டங்களின் குறுவை, சம்பா சாகுபடி பாசனத்துக்காக முதல்வர் ஸ்டாலின் நேற்று கல்லணையில் இருந்து தண்ணீர் திறந்து வைத்தார்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என மூன்று போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த சாகுபடிக்கு தேவையான தண்ணீர் மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12ம் தேதி திறந்து விடப்படுவது வழக்கம். அதன்படி, மேட்டூர் அணையில் இருந்து முதல்வர் ஸ்டாலின் கடந்த 12ம் தேதி தண்ணீர் திறந்துவிட்டார். இந்த தண்ணீர் கரூர், திருச்சி வழியாக நேற்று மாலை தஞ்சாவூர் மாவட்ட எல்லையான கல்லணைக்கு வந்தது.

இதற்கிடையே, தஞ்சாவூரில் 2 நாட்கள் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக முதல்வர் ஸ்டாலின் நேற்று சென்னையில் இருந்து திருச்சிக்கு விமானத்தில் வந்தார். பின்னர், அங்கிருந்து கார் மூலம் கல்லணைக்கு வந்து, சுற்றுலா மாளிகையில் ஓய்வு எடுத்தார். பின்னர், மாலை 6.05 மணிக்கு அங்கிருந்து நடந்து சென்று கல்லணையில் இருந்து காவிரி, கொள்ளிடம் ஆறுகளில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து வைத்தார். விவசாயம் செழிக்க வேண்டி ஆற்றில் பூக்கள், நவதானியங்களை தூவினார்.

காவிரி, வெண்ணாற்றில் விநாடிக்கு தலா 1,500 கன அடி, கல்லணை கால்வாயில் 500 கன அடி, கொள்ளிடத்தில் 400 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்மூலம் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா சாகுபடியில் 13 லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறும்.



இதையொட்டி, கல்லணையில் உள்ள காவிரி, வெண்ணாறு, கல்லணை கால்வாய், கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் உள்ள ஷட்டர்கள் சீரமைக்கப்பட்டு புதிய வண்ணம் பூசப்பட்டிருந்தது. கரிகால சோழன், ராஜராஜசோழன், அகத்தியர், காவிரி தாய், சர் ஆர்தர் காட்டன் சிலைகளுக்கும் வண்ணம் பூசப்பட்டிருந்தது.

முன்னதாக, டெல்டா பகுதிகளில் நீர்நிலைகள் தூர்வாரப்பட்டது, சாகுபடி விவரங்கள் குறித்து அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள், ஆட்சியர்களிடம் முதல்வர் கேட்டறிந்தார். ''மேட்டூர் அணையின் நீர் இருப்பு, நீர்வரத்து, மழை, கர்நாடக அணைகளில் இருந்து கிடைக்க வேண்டிய நீரின் அளவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, காவிரி டெல்டா பாசன பகுதிகளுக்கு தேவைக்கேற்ப தண்ணீரை பகிர்ந்தளிக்க வேண்டும். பாசனத்துக்கு வழங்கப்படும் நீரை சிக்கனமாகவும், தேவைக்கேற்பவும் பயன்படுத்தி அதிக மகசூல் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். உரங்கள், விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் தேவையான அளவு இருப்பதை உறுதி செய்ய வேண்டும்'' என அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, எஸ்.எஸ்.சிவசங்கர், கோவி.செழியன், அன்பில் மகேஸ், மெய்யநாதன், எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, எஸ்.கல்யாணசுந்தரம், எஸ்.முரசொலி, ஆர்.சுதா, டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏகேஎஸ்.விஜயன், முன்னாள் மத்திய அமைச்சர் பழநிமாணிக்கம் மற்றும் துரை.சந்திரசேகரன், டிகேஜி.நீலமேகம், சாக்கோட்டை எஸ்.அன்பழகன் உள்ளிட்ட எம்எல்ஏக்கள், நீர்வளத் துறை அரசு செயலர் ஜெ.ஜெயகாந்தன், மாவட்ட ஆட்சியர்கள் பிரியங்கா பங்கஜம் (தஞ்சாவூர்), பிரதீப்குமார் (திருச்சி), மோகனசந்திரன் (திருவாரூர்), ஸ்ரீகாந்த் (மயிலாடுதுறை), ஆகாஷ் (நாகை), மு.அருணா (புதுக்கோட்டை) ஆகியோர் கலந்துகொண்டனர்.

26 ஆண்டுகளுக்கு பிறகு..

காவிரி டெல்டா மாவட்ட பாசனத்துக்காக கடந்த 1998 ஜூன் 23ம் தேதி அப்போதைய முதல்வர் கருணாநிதி கல்லணையை திறந்து வைத்தார். அதன்பிறகு, கல்லணையில் அமைச்சர்கள் மட்டுமே தண்ணீர் திறந்து வந்தனர். 26 ஆண்டுகளுக்கு பிறகு கல்லணையில் முதல்வர் ஸ்டாலின் தண்ணீர் திறந்து வைத்துள்ளார். தவிர, மேட்டூர் அணை, கல்லணையை ஒரே ஆண்டில் திறந்துவைத்த முதல்வர் ஸ்டாலின் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பனை மரத்தில் கள் இறக்கி நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான் போராட்டம்



தூத்துக்குடி: ஜூன்.16-

தமிழகத்தில் கள் இறக்க அனுமதி கோரி தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே சீமான் பனை மரத்தில் ஏறி, கள் இறக்கி போராட்டத்தில் ஈடுபட்டார்.

சாத்தான்குளம் அருகேயுள்ள பெரியதாழையில் நேற்று நடைபெற்ற கள் இறக்கும் போராட்டத்தின்போது, கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பனை மரம் ஏறினார். பின்னர் கீழே இறங்கிய சீமான், அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையில் நிர்வாகிகளுடன் பனையோலை பட்டையில் கள் அருந்தினார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது: பனை, தென்னையில் இருந்து இறக்கப்படும் கள் வேளாண்மையோடு சேர்ந்தது. தமிழகத்தில் ஜல்லிக்கட்டு தடை இருந்ததை உடைத்தெறிந்தோம். அதேபோல, கள் இறக்க அனுமதி மறுக்கப்படுவதையும் உடைத்தெறிவோம்.

கள் போதை பானம் என்றால், டாஸ்மாக் கடையில் விற்கப்படுவது மிளகு ரசமா? அல்லது புனித நீரா? மற்ற மாநிலங்களில் கள் இறக்க அனுமதி இருக்கும்போது, தமிழ்நாட்டில் மட்டும் தடை செய்யப்படுவது ஏன்? பனை கள்ளுக்கு ஏற்பட்ட தடையால் பனை மரங்கள் குறைந்து வருகின்றன. எனவே, நாம் தமிழர் கட்சி சார்பில் அனைத்து இடங்களிலும் பனை விதை விதைத்து வருகிறோம்.

கள் விற்க அனுமதி கேட்டால், டாஸ்மாக் மது அருந்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து அரசு அறிவுரை வழங்குகிறது. கள் எங்கள் உரிமை. கள்ளுக்கான தடையை மீட்டெடுப்பதே எங்களது கடமை. இவ்வாறு சீமான் பேசினார்.

தமிழ்நாடு கள் பாதுகாப்பு இயக்கத் தலைவர் நல்லுசாமி பேசும்போது, 'பனை கள்ளை போதைப் பொருளாக அறிவித்துள்ளனர். இது தவறு. கள் இறக்க அனுமதி தரவில்லை என்றால், தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நிகழ்வது உறுதி' என்றார்.



## பாஜக கூட்டணிக்கு விஜய் வரமாட்டார்: ராம.சீனிவாசன் கருத்து

திண்டுக்கல்: ஜூன்.16-

தவெக தலைவர் விஜய் பாஜக கூட்டணிக்கு வர மாட்டார் என்று பாஜக மாநிலப் பொதுச் செயலாளர் ராம.சீனிவாசன் கூறினார். திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது:

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் பாமக, தேமுதிக, அமமுக மற்றும் சிறிய கட்சிகள் பாஜகவுடன் கூட்டணி அமைக்கும். திருமாவளவனுக்கு கிடைக்கும் வாக்குகளில் பாதியை விஜய் எடுத்துச் சென்று விடுவார். அதேபோல, கணிசமான சிறுபான்மையினர் வாக்குகள் விஜய்க்குச் சென்றுவிடும் என்று திமுகவினர் அச்சப்படுகின்றனர்.

பாஜக கூட்டணிக்கு விஜய் வர மாட்டார். ஒரு நடிகர் கட்சி தொடங்கி உடனடியாக கூட்டணி என்று கூறினால், அவரது கட்சி காலியாகிவிடும். சிரஞ்சீவி, விஜயகாந்த் போன்றோர் முதலில் தனித்தே தேர்தலை சந்தித்தனர்.

விஜய் முதல்வராக வேண்டும் என அவரது ரசிகர்கள் விரும்புகின்றனர். இச்சூழலில், பழனிசாமியை முதல்வராக்குவோம் என்று விஜய் பிரச்சாரம் செய்தால், அவரது கட்சி காலியாகிவடும். கூட்டணி இல்லாமல் இருந்தால்தான் விஜய் வாக்குகள் பெறுவார். கூட்டணியில் சேர்ந்தால் அவர் வாக்குகளைப் பெற முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பாஜக சார்பில் மத்திய அரசின் சாதனை விளக்க கண்காட்சி குள்ளனம்பட்டியில் நேற்று நடைபெற்றது. கண்காட்சியை மாநிலப் பொதுச் செயலாளர் ராம.சீனிவாசன் திறந்துவைத்து, நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

## முருக பக்தர்கள் மாநாட்டை அரசியலுக்கு பயன்படுத்தினால் நடவடிக்கை: உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவு



மதுரை: ஜூன்.16-

ஆன்மிக மாநாட்டை அரசியலுக்குப் பயன்படுத்தினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மதுரையில் வரும் 22ம் தேதி நடைபெறும் முருக பக்தர்கள் மாநாட்டுக்கு 52 நிபந்தனைகளுடன் போலீஸார் அனுமதி வழங்கினர்.

இதில் 6 நிபந்தனைகளை மாற்றியமைக்க கோரி இந்து முன்னணி சார்பிலும், அறுபடை வீடுகள் அமைக்கக் கூடாது என்று மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம் சார்பிலும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் இடையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றை நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார்.

அவர் தனது உத்தரவில் கூறியிருப்பதாவது: இந்திய அரசியலமைப் பின்படி ஒவ்வொருவரும் தங்கள் மதத்தை சுதந்திரமாகப் பின்பற்றவும், பிரச்சாரம் செய்யவும் உரிமை உள்ளது. அதேநேரத்தில், மதவாதம் மற்றும் நல்லிணக்கத்தை பாதிப்பதாக இருந்தால் கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

இந்த மாநாடு அரசியலுக்காக நடத்தப்படுகிறது என்று இடையீட்டு மனுதாரர்கள் சார்பில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத அமைப்புகளை அரசியலுக்காகப் பயன்படுத்தினால் மதத்தை தவறாகப் பயன்படுத்துவதை தடுக்கும் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கலாம்.

மாநாட்டுக்கு வரும் வாகனத்துக்கு பாஸ் கேட்டு விண்ணப்பித்தால் 24 மணி நேரத்தில் வழங்க வேண்டும். இரு ட்ரோன்கள் பறக்கவும் அனுமதி வழங்கப்படுகிறது. அறுபடை வீடுகளின் மாதிரி அமைக்க அறநிலையத் துறை, மாநகராட்சியிடம் அனுமதி பெறத் தேவையில்லை. மாநாடு நடைபெறும் இடத்தில் ஏற்கெனவே பல கட்சிகளின் மாநாடுகள் நடைபெற்றுள்ளன. அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் இருக்க போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட வேண்டும்.

மத நல்லிணக்கம்...

இந்த மாநாட்டால் மத நல்லிணக்கம் சீர்குலைய வாய்ப்பு இருப்பதாக அரசுத் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதாரமாக திருப்பரங்குன்றம் ஆர்ப்பாட்டத்தில் சிலரின் பேச்சுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. எனவே, இந்த மாநாட்டில் மத நல்லிணக்கம் காப்பாற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.



# பரந்தூர் விவசாயிகளுடன் தவெக தலைவர் விஜய் சந்திப்பு: போராட்டம் வெற்றிபெற துணை நிற்பதாக உறுதி

பனையூர், ஜூன்.16–

பரந்தூர் விமான நிலைய எதிர்ப்புப் போராட்டக் குழுவினர் மற்றும் விவசாயிகள் தவெக தலைவர் விஜய்யை நேரில் சந்தித்தனர்.

சென்னையின் 2வது விமான நிலையம் பரந்தூர் பகுதியில் அமைய உள்ளது. இதற்கு மத்திய பாதுகாப்பு அமைச்சகம், பொருளாதார விவகாரங்களுக்கான துறை, விமான நிலையங்களுக்கான பொருளாதார ஒழுங்கு முறை ஆணையம், இந்திய வானிலை ஆய்வுத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் முதல் கட்ட ஒப்புதலை அளித்துள்ளன.

மொத்தம் 13 கிராமங்களில் இருந்து இந்த விமான நிலையத்துக்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட உள்ளன. இந்த நிலங்களில் நீர்நிலைகள், ஏரி, குளங்கள், விவசாய நிலங்கள், வீடுகள், அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளிட்டவை அடக்கம். இந்த விமான நிலையத்துக்காக நிலம் எடுக்கப்படும் கிராமங்களில் ஏகனாபுரம் உள்ளிட்ட கிராமங்கள் முழுவதுமாக கையகப் படுத்தப்பட உள்ளன. இதனால் இந்த கிராமத்தை மையமாக வைத்து ஆயிரம் நாளை கடந்து மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த போராட்டத்துக்கு பல்வேறு அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் கடந்த ஜனவரி மாதம் பரந்தூர் சென்று அங்கு போராடி வரும் மக்களை சந்தித்து தனது ஆதரவை தெரிவித்தார்.

இந்த நிலையில், தவெக தலைவர் விஜய்யை அவரது பனையூர் அலுவலகத்தில் பரந்தூர் விமான நிலைய எதிர்ப்புப் போராட்டக் குழுத் தலைவர் ஜி.சுப்பிரமணியன் தலைமையில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள், சந்தித்துப் பேசினர்.

பரந்தூர் மக்களின் போரா ட்டம் வெற்றியடைய தமிழக வெற்றிக் கழகம் என்றும் துணை நிற்கும் என விஜய் உறுதி அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பரந்தூர் மக்களின் போராட்டத்துக்கு நேரில் சென்று தமது முழு ஆதரவை தெரிவித்த விஜய்க்கு போராட்டக் குழுவினரும் நன்றி தெரிவித்தனர்.

# பொருட்களின் விலை அடியோடு மாறப்போகிறது.. ஜிஎஸ்டி வரியில் வருது பெரிய மாற்றம்.. நிர்மலா முக்கிய பிளான்

சென்னை, ஜூன்.16–

வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி), சுங்கத் துறைகளைச் சேர்ந்த மூத்த அதிகாரிகளை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சந்திக்கவுள்ளார். வரி செலுத்துவோர் சேவை, வரி தொடர்பான வழக்கு மேலாண்மை, பணத்தைத் திரும்பப் பெறுதல், வர்த்தக வசதி, ஜிஎஸ்டியில் உள்ள குறைபாடுகள் போன்ற பல்வேறு துறைகளில் அவர்களின் செயல்திறனை மதிப்பிடுவதே இந்த சந்திப்பின் முக்கிய நோக்கம் என்று அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வருமான வரித்துறையின் செயல்திறன் குறித்த ஆய்வு ஜூன் 23ஆம் தேதி வருமான வரித்துறையின் முதன்மை தலைமை ஆணையர்களை அமைச்சர் நிர்மலா சீதாராமன் சந்திக்கவுள்ளார். அப்போது ஜிஎஸ்டி சேவை வழங்குவதை மேம்படுத்துவது, வழக்கு எண்ணிக்கையை குறைப்பது, ஜிஎஸ்டி செலுத்துவதற்கான பொறுப்புணர்வை அதிகரிப்பது போன்ற விஷயங்களில் கவனம் செலுத்தப்படும்.



மேல்முறையீட்டு மனுக்கள் நிலுவையில் இருக்கும் கால அளவை ஆய்வு செய்து, பழைய வழக்குகளை விரைவாக முடித்து வழக்குகளின் சுமையைக் குறைக்கவும் அமைச்சர் வலியுறுத்துவார் என்று வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) விகிதங்களை முறைப்படுத்துவது குறித்து ஜிஎஸ்டி கவுன்சில் தனது அடுத்த கூட்டத்தில் விவாதிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஜிஎஸ்டி வரி விகிதத்தில் தற்போதுள்ள நான்கு அடுக்குகளை மூன்று அடுக்குகளாகக் குறைக்கும் வகையில், 12% வரி விதிப்பை நீக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வரி விகிதங்களை முறைப்படுத்த ஆலோசனை வரி விகிதங்களை முறைப்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தி வரும் அமைச்சர்கள் குழுவுக்கு (நிஷ்வி) ஆலோசனை வழங்கும் அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் மத்தியில், 12% வரி விதிப்பு அடுக்கு இனி தேவையில்லை என்ற ஒருமித்த கருத்து உருவாகியுள்ளது. பொதுமக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களை 5% வரி விதிப்பு அடுக்குக்கு மாற்றவும், மற்றவற்றை 18% வரி விதிப்பு அடுக்குக்கு மாற்றவும் வாய்ப்புள்ளது. 12% வரி விதிப்பு அடுக்கை நீக்குவதற்கு பெரும்பாலான மத்திய மற்றும் மாநில அரசு அதிகாரிகள், நிபுணர்கள் மற்றும் அமைச்சர்கள் குழு பிரதிநிதிகள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தற்போதைய ஜிஎஸ்டி அமைப்பு தற்போது, இந்தியாவில் நான்கு அடுக்கு ஜிஎஸ்டி அமைப்பு உள்ளது 5%, 12%, 18% மற்றும் 28%. அத்தியாவசியப் பொருட்களுக்குக் குறைவான வரியும், ஆடம்பரப் பொருட்களுக்கு அதிக வரியும் விதிப்பது இதன் முக்கிய கொள்கையாகும். ஏழைகள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களான unpack செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், உப்பு, பால், புதிய காய்கறிகள், கல்வி மற்றும் சுகாதார சேவைகள் போன்றவற்றுக்கு பூஜ்ஜிய வரி விதிக்கப்படுகிறது.

12% வரி விதிப்பு அடுக்கில், கெட்டியான பால், மீன் முட்டைகளிலிருந்து தயாரிக்கப்படும் Caviar மற்றும் Caviar Substitutes, 20 லிட்டர் பாட்டில்களில் அடைக்கப்பட்ட குடிநீர், வாக்கி டாக்கி, டாங்கிகள் மற்றும் பிற கவச வாகனங்கள், காண்டாக்ட் லென்ஸ்கள், சீஸ், பேரீச்சம்பழம் மற்றும் உலர் பழங்கள், உறைந்த காய்கறிகள், Sausages மற்றும் அதுபோன்ற இறைச்சி பொருட்கள், பாஸ்தா, ஜாம் மற்றும் ஜெல்லி, பழச்சாறு கலந்த பானங்கள், பூஜ்ஜியா உட்பட Namkeens, கறி பேஸ்ட், Mayonnaise, டூத் பவுடர், ஃபீடிங் பாட்டில்கள், தரைவிரிப்புகள், குடைகள், தொப்பிகள், சைக்கிள்கள், குறிப்பிட்ட வீட்டு உபயோகப் பொருட்கள், பிரம்பு அல்லது மரத்தால் செய்யப்பட்ட அமைப்புகள், பென்சில்கள் மற்றும் கிரையான்கள், சாக்கு மற்றும் பருத்தியால் செய்யப்பட்ட கைப்பை மற்றும் ஷாப்பிங் பேக், 1,000 க்கும் குறைவான காலணிகள், Diagnostic Kits, மற்றும் மார்பிள் மற்றும் கிரானைட் ஆகியவை அடங்கும். 12% ஜிஎஸ்டி வசூலிக்கப்படும் சேவைகளில், குறிப்பிட்ட கட்டுமானப் பணிகள், ஒரு நாளைக்கு 7,500 வரை உள்ள ஹோட்டல் அறைகள், விமானம் மூலம் பயணிகள் செய்யும் போக்குவரத்து (Economy வகுப்பைத் தவிர), சில வகையான Multimodal போக்குவரத்து, மற்றும் குறிப்பிட்ட Professional, Technical மற்றும் Business சேவைகள் ஆகியவை அடங்கும்.

# மருந்து நிறுவனத்திடம் ரூ.1.9 கோடிக்கு பரிசு பெற்ற 30 மருத்துவர்களை ஒன்றிய அரசு காப்பாற்றுகிறதா?

## தகவல் சட்டத்தில் அம்பலமாகியும் நடவடிக்கை இல்லை

புதுடெல்லி, ஜூன்.16–

மருந்து நிறுவனத்திடம் ரூ.1.9 கோடிக்கு பரிசு பெற்ற 30 மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், அவர்களை ஒன்றிய அரசு காப்பாற்றுகிறதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இவ்விவகாரம் தகவல் சட்டத்தின் மூலம் அம்பலமாகி உள்ளது. ஒன்றிய அரசின் மருந்து சந்தைப்படுத்தல் நெறிமுறைகளின்படி, சம்பந்த ப்பட்ட மருந்து நிறுவனங்கள் மருத்துவர்களுக்கு டூர் பயணங்களையோ அல்லது வேறு விதமான சலுகைகளையோ வழங்குவது சட்டப்படி குற்றமாகும். ஆனால் 'அப்பிவி' என்ற மருந்து நிறுவனத்திடமிருந்து ரூ.1.9 கோடி மதிப்பிலான வெளிநாட்டுப் பயணப் பரிசுகளைப் பெற்ற 30 மருத்துவர்கள் மீது தேசிய மருத்துவ ஆணையம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மருத்துவர்களின் பெயர்களை வெளியிட ஒன்றிய அரசின் மருந்துத் துறை மறுத்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த விவகாரத்தை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் வெளிக்கொண்டு வந்த கண் மருத்துவரும், சமூக ஆர்வலருமான டாக்டர் கே.வி.பாபு கூறுகையில், 'விதிமீறல் என்று தெளிவாகத் தெரிந்தும், குற்றமிழைத்த மருத்துவர்களை மருந்துத் துறை பாதுகாக்கிறது. அவர்களின் பெயர்களை வெளியிட மறுப்பது கண்டிக்கத்தக்கது.



இந்த மருத்துவர்கள், மொனாக்கோ மற்றும் பாரிஸ் போன்ற நாடுகளுக்கு மருத்துவ மாநாடு என்ற பெயரில் இன்பச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இதுகுறித்துக் கேட்டபோது, மருத்துவர்களின் பெயர்கள் தனிப்பட்ட தகவல் என்றும், அதை வெளியிடுவதில் பொதுநலன் இல்லை என்றும் கூறி மருந்துத் துறை பெயர்களை வெளியிட மறுத்துவிட்டது. இந்த விவகாரம் குறித்து மருந்துத் துறை அமைத்த சிறப்புத் தணிக்கைக் குழு, 'அப்பிவி' நிறுவனம் விதிகளை அப்பட்டமாக மீறியுள்ளதைக் கண்டறிந்தது. ஆனாலும், அந்த நிறுவனத்திற்கு மருந்துத் துறையின் உயர்மட்டக் குழு வெறும் கண்டனம் மட்டுமே தெரிவித்துவிட்டு, சட்டப்படி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், விதிமீறலில் ஈடுபட்ட மருத்துவர்களின் பெயர்களை தேசிய மருத்துவ ஆணையத்திடம் வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதே குழு பரிந்துரை செய்திருந்தும், இன்றுவரை குற்றம் சாட்டப்பட்ட 30 மருத்துவர்களின் பெயர்கள் அனுப்பவில்லை. இவ்விசயத்தில் குற்றம்சாட்டப்பட்ட 30 மருத்துவர்களையும் ஒன்றிய அரசு காப்பாற்றுகிறதா?' என்ற கேள்வி எழுந்துள்ளது என்றார்.



# நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கருத்துப்பட்டறை

சென்னை, ஜூன்.16–

தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிக்கை: ஒன்றிய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் உள்ள நுகர்வோர் விவகாரங்கள் துறையின் மூலம் தென்னிந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான (தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா, புதுச்சேரி, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகள்) நுகர்வோர் பாதுகாப்பு குறித்த ஒருநாள் கருத்துப்பட்டறை, சென்னையில் நேற்று நடந்தது.தமிழ் நாடு சினிமா

# சென்னையில் 6 விமானங்கள் ரத்து! திடீர் அறிவிப்பால் பயணிகள் அவதி

சென்னை, ஜூன்.16–

சென்னை விமான நிலையத்தில் இன்று 6 விமானங்கள் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளதால், பயணிகள் அவதிக்குள்ளாகி உள்ளனர்.

நிர்வாக காரணங்களாலும், போதிய பயணிகள் இல்லாமலும் இந்த 6 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இன்று இரவு 9 மணிக்கு சென்னை கோழிக்கோடு ஸ்பைஸ்ஜெட் தனியார் பயணிகள் விமானம், இரவு 8.35 மணிக்கு சென்னை கொச்சி ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் பயணிகள் விமானம், மாலை 3 மணிக்கு சென்னை சிவமுகா ஸ்பைஸ் ஜெட் தனியார் பயணிகள் விமானம் ஆகிய 3 புறப்பாடு விமானங்கள் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளன.

அதேபோல் கோழிக்கோட்டில் இருந்து சென்னை வரும் ஸ்பைஸ்ஜெட் தனியார் பயணிகள் விமானம், அந்தமானில் இருந்து சென்னை வரும் ஆகாஷா ஏர் லைன்ஸ் பயணிகள் விமானம், சிவமுகாவிலிருந்து சென்னை வரும் ஸ்பைஸ்ஜெட் தனியார் பயணிகள் விமானம் ஆகிய 3 வருகை விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்து விமான நிறுவனங்கள் தரப்பில் கூறுகையில், நிர்வாக காரணங்கள் காரணமாகவும், போதிய பயணிகள் இல்லாததாலும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இந்த விமானங்களில் பயணிக்க முன் பதிவு செய்திருந்த பயணிகளுக்கு, ஏற்கனவே தகவல்கள் தெரிவிக்கப்பட்டு, அவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளனர்.

# தாழ்வாக செல்லும் உயர் அழுத்த மின் கம்பிகளை சீரமைக்க வேண்டும்: விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கோரிக்கை

கூடலூர், ஜூன்.16–

கூடலூர் வனக் கோட்டம் சார்பில் விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் கூடலூர் கோட்ட வன அலுவலர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு வன அலுவலர் வெங்கடேஷ் பிரபு தலைமை வகித்தார்.

வனச்சரகர்கள், வனவர்கள் முன்னிலை வகித்தனர். தேவர்சோலை பேரூராட்சி 11 ம் வார்டு கவுன்சிலர் ஹனிபா, பாடந்துறை உழவர் உற்பத்தியாளர் குழு செயலாளர் ரகுநாதன் மற்றும் கூடலூர் பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர்.



கூட்டத்தில் பாடந்துறை கிராம சுற்றுவட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக உலா வரும் மக்னா யானையை முதுமலை முகாமிற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். பாடந்துறை நகரம் மற்றும் குடியிருப்பு பகுதிகளுக்குள் காட்டு யானைகள் வராமல் தடுக்க கண்காணிப்பு கேமரா மற்றும் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும்.

மேலும் முதுமலை புலிகள் காப்பக மறு குடியமர்வு திட்டத்தின் கீழ் அய்யன் கொல்லி பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு தேவையான சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை முழுமைப்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பாடந்துறை சுற்றுவட்டார பகுதிகளில் விவசாய நிலங்களில் தாழ்வாக செல்லும் உயர் அழுத்த மின் கம்பிகளால் யானை உள்ளிட்ட வன உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை உள்ளதால் அவற்றை மாற்றிய மைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவர் சோலை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்குள் காட்டு யானைகள் வருவதை தடுக்க கடசன கொல்லி முதல் உட்பிரேயர் வரை அகழி அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது.

தொடர்ந்து, பாடந்துறை பகுதியில் காட்டு யானைகளால் சேதப்படுத்தப்பட்ட பயிர்கள் மற்றும் யானைகள் தாக்கி இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு கேட்டு விண்ணப்பித்த அனைவருக்கும் இழப்பீட்டு தொகை வழங்கிய வனத்துறைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

# உலகம் அழிகிறது? கடலிலிருந்து வெளிவந்த 'கருப்பு நிற' பனிப்பாறை! விஞ்ஞானிகள் ஷாக்

ஒட்டாவா, ஜூன்.16–

கனடாவின் கடற்கரை பகுதியில் கருப்பு நிறத்தில் பனிப்பாறை ஒன்று தென்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மிகவும் அரிதாக பார்க்கப்படும் இந்த பனிப்பாறை, வெளியில் வருவது உலக அழிவுக்கான எச்சரிக்கையாக கூட இருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர்.

கனடாவின் லாப்ரடோர் கடற்கரையில் இந்த கருப்பு பனிப்பாறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஹல்லூர் அன்டோனியூசென் எனும் மீனவர், தனது படகிலிருந்து மீன் பிடித்துக்கொண்டிருந்த போது அவர் இந்த பனிப்பாறையை பார்த்திருக்கிறார். பார்ப்பதற்கு வித்தியாசமாகவும், விநோதமாகவும் இருக்கவே உடனே தனது செல்போனில் அதை படம்பிடித்துள்ளார்.

கருப்பு நிற பனிக்கட்டி

இந்த பாறை சுமார் மூன்று மாடி கட்டிடத்தின் சைஸில் இருந்ததாக கூறும் அவர், கருப்பு நிறத்தில் பனிப்பாறையை தன் வாழ்நாளில் இதற்கு முன்னர் பார்த்ததே இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார். அவர் சோஷியல் மீடியாக்களில் பகிர்ந்த புகைப்படம் தற்போது பரவலாக ஷேராகி வருகிறது. பனிக்கட்டிகளின் தோற்றம் கனடா என்பது ஆர்டிக் பகுதியை ஒட்டியுள்ள நாடு. ஆர்டிக் பகுதியில் மைனஸில் வெப்பநிலை இருக்கும் என்பதால், பனிக்கட்டிகள் அதிக அளவில் இருக்கும். கடலில் இந்த பனிக்கட்டிகள் மிதந்து வருவது இயல்பான ஒன்றுதான். வழக்கமாக பனிக்கட்டிகள் வெண்மை நிறத்தில்தான் இருக்கும். இதற்கு காரணம், பனிக்கட்டிக்குள் நீர் துகள்கள் இருப்பதால், அது சூரிய ஒளியை பிரதிபலிக்கிறது. எனவே கட்டிகள் வெள்ளை நிறத்தில் தெரிகின்றன. சில



நேரங்களில் கண்ணாடி மாதிரி கூட தெரியும்.

வித்தியாசமான ஆர்டிக் பகுதி

ஆனால், கருப்பு நிறத்தில் பனிக்கட்டியை இதற்கு முன்னர் யாரும் பார்த்தது கிடையாது. அப்படியெனில் இது என்ன? இதற்கான விடையை ஆய்வாளர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதை புரிந்துக்கொள்ள வேண்டும் எனில், பனிப்பாறைகளின் பயணத்தை தெரிந்துக்கொள்ள வேண்டும். மலை உச்சியில் பனிப்பாறைகள் வேகமாக உருவாகும். ஆர்டிக் பகுதிகளில் உள்ள மலைகளில் பாறைகள் உருவாகி, அவை கோடைக்காலத்தில் கொஞ்சம், கொஞ்சமாக அடர்த்தியை இழந்து, அடிவாரத்தை நோக்கி வந்திருக்கலாம்.

ஆய்வாளர்களின் விளக்கம்

இந்த பயணத்தின்போது, மண்ணையும், செடி, கொடி, மரத்தின் பாகங்கள் என இன்ன பிற ஏராளமான பொருட்களை ஏற்றிக்கொண்டு பனிப்பாறை வந்திருக்கும். கோடைக்காலம் முடிந்து, மீண்டும் பனிக்காலம் தொடங்கும்பொது, இந்த மண்ணை சுற்றி பனி உருவாகியிருக்கலாம். அப்படி உருவான பனிக்கட்டி தற்போது கடலுக்கு வந்த சேர்ந்திருக்கிறது. இதைத்தான் மீனவர் பார்த்திருக்கிறார் என்று ரியல் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர் லெவ் தாராசோவ் கூறுகிறார். உலக அழிவா? ஆனால் வேறு சில ஆய்வாளர்கள் வித்தியாசமான விளக்கத்தை கொடுத்திருக்கின்றனர். கருப்பான பொருள் வண்டல் மண்ணாக இருக்கலாம். இந்த மண் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பனிப்பாறைக்குள் சரிந்து விழுந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. இப்போது மீனவர் பார்த்த கருப்பு பனிப்பாறை, அதன் மொத்த சைஸில் வெறும் 5% தான். இந்த பாறையை மூடியிருந்த பனி முழுவதுமாக கரைந்துள்ளது என்று கூறியுள்ளனர். எல்லாம் ஓகேதான். ஆனால், வண்டல் மண் எப்படி கடலில் மிதக்கும்? இந்த கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. வேறு சிலரோ, உலகம் முழுவதும் நடக்கும் மாற்றங்களை குறிப்பிட்டு, இந்த கருப்பு பனிப்பாறை அழிவின் அறிகுறி என்று கூறுகின்றனர். அதாவது இஸ்ரேல்ஈரான் போர் அணு ஆயுத மோதலை தொடங்கும் என்றும், இந்த மோதல் உலகம் முழுவதும் அணு ஆயுத பயன்பாட்டை ஏற்படுத்தும் என்றும், அது உலகத்தை அழிக்கும் என்றும் கூறுகின்றனர். இதனை முன்கூட்டியே தெரியப்படுத்ததான் கருப்பு பனிப்பாறை தோன்றியிருப்பதாகவும் கூறியுள்ளனர்.



# பென்ஸ் படத்தில் இணைந்தார் மடோனா செபாஸ்டியன்

பாக்கியராஜ் கண்ணன் இயக்கும் படம், 'பென்ஸ்'. இதன் கதையை, இயக்குநர் லோகேஷ் கனகராஜ் எழுதியுள்ளார். லோகேஷ் கனகராஜின் 'எல்சியு' படமான இதில், ராகவா லாரன்ஸ், நிவின் பாலி, சம்யுக்தா மேனன் நடிக்கின்றனர். பேஷன் ஸ்டுடியோஸ் சுதன் சுந்தரம், லோகேஷ் கனகராஜின் ஜி ஸ்குவாட், ஜெகதீஷ் பழனிசாமியின் தி ரூட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன.

நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களிலும், ஐக்கிய அரபு எமிரேட்ஸிலும் படப்பிடிப்பு நடத்த திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் மடோனா செபாஸ்டியன் இப்படத்தில் நடிக்க இருக்கிறார்.

லோகேஷின் 'எல்சியு' படமான 'லியோ'வில் நடித்திருந்தார் மடோனா. அதில் அவர் கதாபாத்திரம் இறந்துவிடும். இப்போது இதிலும் இணைந்துள்ளார் என்பதால் 'லியோ'வுக்கு முந்தைய கதையாக இது இருக்கலாம் என்கிறார்கள். இப்படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது.




# பெய்டு வியூஸ் விஜய் பட தயாரிப்பாளர் ஒப்புதல்


விஜய் நடித்த 'வாரிசு' படத்தைத் தயாரித்த பிரபல தெலுங்குத் தயாரிப்பாளர் தில் ராஜு அவரது தயாரிப்பில் அடுத்த வர உள்ள 'தம்முடு' தெலுங்குப் படத்தின் டிரைலர் வெளியீட்டு விழாவில் 'பெய்டு வியூஸ்' குறித்து வெளிப்படையாகப் பேசியுள்ளார். தில் ராஜு பேசும்போது, ''சமூக வலைத்தளத்தில் பெய்டு வியூஸ் மூலம் அந்தப் படம் ரசிகர்களிடம் உண்மையான ஆர்வத்தைத் தூண்டியதா என்பதை ஒரு போதும் புரிந்து கொள்ள முடியாது.

இதற்கேற்றபடி மாறுவது கடினம் தான் என்றாலும் இதுதான் முன்னோக்கிச் செல்லும் ஒரு வழி. ஊடகங்கள் நம்மை சிக்கலான ஒரு சூழலில் தள்ளுவதற்கான வாய்ப்புகளைத் தேடுகின்றன. படம் நன்றாக இருந்தால் ரசிகர்கள் பார்க்கட்டும். எனவே, பொய்யான டிஜிட்டல் பார்வைகளை உருவாக்க வேண்டிய அவசியமில்லை'' எனத் தெரிவித்துள்ளார்.

ஒரு சில தயாரிப்பாளர்கள் சமூக வலைத்தளத்தில் இப்படி பணம் கொடுத்து பார்வைகளை அதிகப்படுத்துவதை வாடிக்கையாக வைத்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே இருந்துள்ளது. தற்போது பிரபல தயாரிப்பாளரான தில் ராஜுவே இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

# 'பிரேமலு 2' படம் ட்ராப் ஆவது உறுதி





'பிரேமலு' படத்தின் மாபெரும் வெற்றியை தொடர்ந்து அறிவிக்கப்பட்ட படம் 'பிரேமலு 2'. இதன் படப்பிடிப்பு ஜூனில் தொடங்கி, படத்தினை டிசம்பரில் வெளியிட படக்குழு திட்டமிட்டது. ஆனால், எந்தவொரு அறிவிப்புமே இன்றி, படப்பிடிப்பும் தொடங்கப்படாமல் இருந்தது. தற்போது 'பிரேமலு 2' படம் கைவிடப்பட்டது உறுதியாகி இருக்கிறது.

'பிரேமலு' படத்தின் இணை தயாரிப்பாளரான திலீஷ் போத்தன், 'பிரேமலு 2' படத்தின் பணிகள் நிறுத்திவைக்கப்பட்டு இருப்பதாக பேட்டியொன்றில் தெரிவித்திருக்கிறார். மீண்டும் எப்போது தொடங்கும் என்ற தகவலையும் திலீஷ் போத்தன் தெரிவிக்கவில்லை. இந்த தகவல் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி இருக்கிறது.

கிரிஷ் ஏடி இயக்கத்தில் கடந்த ஆண்டு பிப்ரவரி 9ம் தேதி திரையரங்குகளில் வெளியான படம் 'பிரமேலு'. நஸ்லன் கே.ஃபூர், மமிதா பைஜு நடித்துள்ள இப்படத்துக்கு விஷ்ணு விஜய் இசையமைத்துள்ளார். மேத்யூ தாமஸ், ஷ்யாம் புஸ்கரன் சிறப்புத் தோற்றத்தில் நடித்துள்ளனர். ஃபஹத் பாசில், ஷ்யாம் புஸ்கரன், திலேஷ் போத்தன் ஆகிய மூவரும் இணைந்து படத்தை தயாரித்துள்ளனர்.

ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்ற இப்படம் தமிழ், தெலுங்கு மொழிகளில் டப் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. ரூ.10 கோடிக்கும் குறைவான பட்ஜெட்டில் உருவானதாக கூறப்படும் படம், உலக அளவில் ரூ.130 கோடி வரை வசூலித்தது. டிஸ்னி ப்ளஸ் ஹாட்ஸ்டார் ஓடிடியில் தற்போது காணக் கிடைக்கிறது.



# தமிழ் பாடகி கொடுத்த பார்ட்டியில் கஞ்சா உள்பட போதைப் பொருள்கள்

தெலுங்கில் பிரபல நாட்டுப்புற பாடகியாக வலம் வருபவர் மங்லி. அங்கு திரைப்படங்களிலும் தமிழ், தெலுங்கு உட்பட பல்வேறு பாடல்களை பாடியுள்ளார். இவர் நேற்று முன்தினம் தனது 31வது பிறந்தநாளை கொண்டாடியுள்ளார். இதற்காக ஐதராபாத்தில் உள்ள திரிபுரா ரெசார்ட்டில் பார்ட்டி ஏற்பாடு செய்துள்ளார். அந்த பார்ட்டியில் மங்லிக்கு தொடர்புடைய நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள், திரை பிரபலங்கள் என கிட்டத்தட்ட 50 விருந்தினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மங்லியில் இந்த பிறந்தநாள் பார்ட்டியில் போதை பொருள் பயன்படுத்தப்படுவதாக அப்பகுதியில் இருக்கும் காவல் துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளது. அப்போது அங்கு போதைப்பொருட்கள், கஞ்சா மற்றும் உயர் ரக வெளிநாட்டு மதுபானங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றை பறிமுதல் செய்த காவல்துறையினர் மங்லி மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

பார்ட்டியில் 48 நபர்கள் போதைப்பொருள் பயன்படுத்தியதாகவும் ஒன்பது பேர் கஞ்சா பயன்படுத்தியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. சோதனையில் காவல் துறையினர் ஈடுபட்ட வீடியோக்கள் சமூக வலைதளத்தில் வெளியாகி வைரலாகியுள்ளது. இந்த சம்பவம் தெலுங்கு திரையுலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# போராடினால் மறக்க முடியாத தொடராக இருக்கும்: இந்திய வீரர்கள் மத்தியில் கவுதம் கம்பீர் எழுச்சி உரை



ஷுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி வரும் 20ம் தேதி ஹெட்டிங்லியில் தொடங்குகிறது. இதற்காக இந்திய அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதன் ஒரு கட்டமாக இந்தியா ஏ, இந்தியா அணிகள் மோதும் பயிற்சி ஆட்டம் பெக்கர்ஹாமில் இன்று தொடங்குகிறது.

இந்நிலையில், இந்திய அணியின் தலைமை பயிற்சியாளரான கவுதம் கம்பீர் வீரர்கள் மத்தியில் உரையாடுவதை பிசிசிஐ தனது இணையதளத்தில் வீடியோவாக வெளியிட்டுள்ளது. அதில் கவுதம் கம்பீர் கூறும்போது, "இந்த சுற்றுப் பயணத்தை இரண்டு விதமாகப் பார்க்கலாம். ஒன்று, மிகவும் அனுபவம் வாய்ந்த எங்களது 3 வீரர்கள் (ரோஹித் சர்மா, விராட் கோலி, ரவிச்சந்திரன் அஸ்வின்) ஆகியோர் இல்லாமல் இருக்கிறோம் அல்லது நாட்டிற்காக ஏதாவது சிறப்பாகச் செய்ய இந்த அற்புதமான வாய்ப்பைப் பெற்றுள்ளோம்.

தற்போதைய டெஸ்ட் அணியில், ஏதாவது சிறப்பாக செய்ய வேண்டும் என்ற பசி, ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு இருப்பதை காண்கிறேன். நாம் தியாகங்களைச் செய்தால், நமது சவுகரியமான இடத்தில் இருந்து வெளியே வந்தால், ஒவ்வொரு நாளும் அல்ல, ஒவ்வொரு செஷனிலும், ஒவ்வொரு மணி நேரத்திலும், ஒவ்வொரு பந்திலும் போராடத் தொடங்கினால், நாம் ஒரு மறக்கமுடியாத சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள முடியும். முதல் டெஸ்ட் போட்டிக்கான அழைப்புகள் எப்போதும் சிறப்பு வாய்ந்தவை, எனவே பேட்டிங்கில் மூன்று மாதங்கள் அற்புதமான அனுபவத்தைக் கொண்ட சாய் சுதர்சனை வரவேற்க விரும்புகிறேன். நீங்கள் மிகவும் வெற்றிகரமான டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை பெறுவதை உறுதிசெய்ய விரும்புகிறேன்.

அர்ஷ்தீப் சிங்கையும் வரவேற்க விரும்புகிறேன். வெள்ளை பந்தில் நீங்கள் அற்புதமாக செயல்பட்டுள்ளீர்கள். சிவப்பு பந்தை கையில் எடுத்து நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

முதல் முறையாக கேப்டனாக செயல்பட உள்ள ஷுப்மன் கில்லையும் வாழ்த்த விரும்புகிறேன். டெஸ்ட் அணியை வழிநடத்துவதை விட பெரிய மரியாதை எதுவும் இல்லை. இப்போது தலைமைத்துவக் குழுவில் ஒரு பகுதியாக இருக்கும் ரிஷப் பந்த்துக்கும் வாழ்த்துக்கள்.

இந்திய அணிக்குள் மீண்டும் வருவது ஒருபோதும் எளிதானதல்ல, ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வந்த ஒருவர் (கருண் நாயர்), கடந்த ஆண்டு உள்ளூர் கிரிக்கெட்டில் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

நீங்கள் பெற்ற ரன்களின் எண்ணிக்கை, ஒருபோதும் விட்டுக்கொடுக்காத மனப்பான்மை, உங்களை மீண்டும் அணிக்குள் கொண்டு வந்துள்ளது. இது இந்த அணியில் உள்ள அனைவருக்கும் ஊக்கமளிக்கும் ஒன்று. அந்த வகையில் கருண் நாயரை வரவேற்கிறேன்" என்றார்.

# துப்பாக்கி சுடுதலில் வெண்கலம் வென்றார் சிஃப்ட் கவுர் சர்மா



ஜெர்மனியின் முனிச் நகரில் ஐஎஸ்எஸ்எஃப் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷன் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சிஃப்ட் கவுர் சாம்ரா 453.1 புள்ளிகள் பெற்று 3வது இடம் பிடித்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

நார்வேயின் ஜீனெட் ஹெக் டியூஸ்டாட் 466.9 புள்ளிகளுடன் தங்க பதக்கத்தையும், சுவிட்சர்லாந்தின் எமிலி ஜேகி 464.8 புள்ளிகளுடன் வெள்ளி பதக்கத்தையும் வென்றனர்.



# வாக்குச்சாவடிகளில் பூத் நிலை முகவர்களை நியமிக்க பிஎல்ஏ2 படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்: அதிகாரிகளுக்கு டிஆர்ஓ உத்தரவு

சித்தூர், ஜூன்.16–

வாக்குச்சாவடிகளில் பூத் நிலை முகவர்களை நியமிக்க பிஎல்ஏ 2 படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு டிஆர்ஓ உத்தரவிட்டுள்ளார்.

சித்தூர் மாவட்ட டிஆர்ஓ அலுவலக வளாகத்தில் நேற்று டிஆர்ஓ மோகன் குமார் தலைமையில் அனைத்து கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் டிஆர்ஓ மோகன் குமார் பேசியதாவது: வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவு நீக்கம் திருத்தம் மற்றும் பிற கோரிக்கைகளுக்கு உரிய நேரத்தில் பதிலளித்து தீர்வு காணப்படும். கலெக்டர் சுமித் குமார் உத்தரவின்படி ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் டிஎம் மற்றும் ஹெச்ஓ மற்றும் டிஆர்டிஏ பிடியுடன் ஒருங்கிணைந்து இறந்தவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, இறந்தவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த செயல்முறை அனைத்து தொகுதிகளிலும் மேற்கொள்ளப்படும்.

வாக்குச் சாவடிகளின் வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்கள் பதிவு, நீக்கம் திருத்தம் மற்றும் பிற கோரிக்கைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு பிஎல்ஓக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வாக்குச்சாவடிகளில் பூத் நிலை முகவர்களை நியமிப்பதற்கான பிஎல்ஏ2 படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்காக மாவட்டம் முழுவதும் 15,497 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. அவற்றில் 1,595 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளது. மிக விரைவில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார். இதில் தெலுங்கு தேசம் கட்சியின் பிரதிநிதி சுரேந்திர குமார், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி பிரதிநிதி உதய் குமார் ரெட்டி, சிபிஐ கட்சி பிரதிநிதி வாட கங்கராஜு, இந்திய தேசிய காங்கிரஸ் பிரதிநிதி பரதேசிதேர்தல் பிரிவு கண்காணிப்பாளர் வாசுதேவன் மற்றும் பலர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.




# விமான விபத்து விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்போம்: ஏர் இந்தியா சிஇஓ கேம்பல் வில்சன்

அகமதாபாத், ஜூன்.16–

அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஏர் இந்தியாவின் தாய் நிறுவனமான டாடா குழுமம் ரூ.1 கோடி நிதியுதவி அளிக்கும். விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்போம் என்று அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி கேம்பல் வில்சன் தெரிவித்துள்ளார்.

ஏர் இந்தியாவின் அதிகாரபூர்வ எக்ஸ் பக்கத்தில் பகிரப்பட்ட வீடியோ பதிவில், "இந்த சம்பவத்தில் விமானத்தில் பயணித்த 241 பயணிகள் உயிரிழந்ததை நாங்கள் உறுதிப்படுத்தியுள்ளோம். மேலும், இந்த இழப்பால் மிகவும் துயரமடைந்துள்ளோம். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களின் அன்புக்குரியவர்களுக்காக பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் தாய் நிறுவனமான டாடா குழுமம், உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் தலா ஒரு கோடி ரூபாய் அல்லது தோராயமாக 85,000 பிரிட்டிஷ் பவுண்டுகளை வழங்குவதாகவும், காயமடைந்தவர்களின் மருத்துவச் செலவுகளை ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளது. தொழில்நுட்பக் குழு இப்போது சம்பவ இடத்தில் உதவி செய்து வருகிறது.

விபத்தில் காயமடைந்த மருத்துவ மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளோம். இந்த கடினமான காலங்களில் ஏர் இந்தியா முழுமையான மற்றும் தடையற்ற உதவியை வழங்க உறுதிபூண்டுள்ளது. நான் விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டேன். அந்தக் கோரக் காட்சிகளை கண்டு மிகவும் வேதனையுற்றேன். அரசு அதிகாரிகளை சந்தித்தேன். களத்தில் பணிபுரிபவர்களுடனும், விசாரணைக் குழுவுக்கும் முழு ஒத்துழைப்பு தருவோம் என தெரிவித்தேன்.

முழு விசாரணைக்கு இன்னும் கால அவகாசம் தேவைப்படும் என்பதை நாங்கள் அறிவோம், இதனால் நாங்கள் வெளிப்படைத்தன்மையுடன் இருப்போம். எங்கள் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை நிலைநிறுத்துவதற்கும் ஏர் இந்தியா தன்னால் முடிந்த அனைத்தையும் தொடர்ந்து செய்யும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்,



# விபத்தில் உயிரிழந்து உடல் உறுப்புகள் தானம்: அரசு மரியாதையுடன் வாலிபர் இறுதிச்சடங்கு

ஆர்.கே.பேட்டை, ஜூன்.16–

சாலை விபத்தில் உயிரிழந்த வாலிபரின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டதை தொடர்ந்து, அவரது உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு செய்யப்பட்டது. ஆர்.கே. பேட்டை தாலுகா ராஜாநகரம், மோட்டூர் கிராமத்தை சேர்ந்தவர் புருஷோத் தமன்(20). இவர் கடந்த 11ம் தேதி தனது நண்பர் முருகன்(20) என்பவரை அழைத்துக் கொண்டு, முருக்க ம்பட்டு கிராமத்தில் இருந்து திருத்தணி நோக்கி பைக்கில் சென்றார். அப்போது, எதிரே வந்த பைக் புருஷோத்தமனின் பைக் மீது மோதியது. இதில், படுகாயமடைந்த புருஷோத்தமன், சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையில் மூளைச்சாவு அடைந்தார். இதையடுத்து, இறந்த புருஷோத்தமனின் உடல் உறுப்புகளை தானம் செய்ய, அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் முன்வந்தனர்.

இதையடுத்து, நேற்று முன்தினம் புருஷோத்தமனின் கண், இதயம் மற்றும் இதய வால்வுகள், நுரையீரல், கல்லீரல், சிறுகுடல், சிறுநீரகம் உள்ளிட்ட உடல் உறுப்புகளை அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு, தானமாக வழங்கப்பட்டது. இந்நிலையில், நேற்று புருஷோத்தமனின் உடல் ராஜாநகரம் கிராமத்தில் உள்ள வீட்டிற்கு கொண்டு வரப்பட்டு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து, மாவட்ட நிர்வாகம் சார்பில் உடல் உறுப்பு தானம் செய்த புருஷோத்தமனின் உடலுக்கு, திருத்தணி ஆர்டிஓ கனிமொழி, தாசில்தார் உதயம் ஆகியோர் நேரில் சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். அதனைத்தொடர்ந்து, புருஷோத்தமனின் உடல் தகனம் செய்யப்பட்டது.

# ஆன்லைன் தளம் வாயிலாக நடந்த சட்டவிரோத மருந்து விற்பனையை தடுத்த தமிழக காவல் துறை

சென்னை, ஜூன்.16–

இண்டியாமார்ட் ஆன்லைன் தளம் வாயிலாக நடந்த சட்டவிரோத 'ஸ்கெடியூல் எச்' மருந்துகள் விற்பனை தடுக்கப்பட்டதாக தமிழக காவல் துறை தெரிவித்துள்ளது. மேலும், எதிர்காலத்தில் இத்தகைய மருந்துகளை சட்டவிரோதமாக ஏதேனும் ஆன்லைன் வர்த்தகத் தளங்கள் விற்பனை செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கையின் ஒரு பகுதியாக கடந்த ஆண்டு காஞ்சிபுரம் காவல் துறை இண்டியாமார்ட் இன்டர்மெஷ் லிமிடெட் என்ற ஆன்லைன் தளத்துக்கு நோட்டீஸ் வழங்கியிருந்தது. அதில், மாநிலம் முழுவதும் இளைஞர்களுக்கு அந்தத் தளத்தின் மூலம் ஸ்கெட்யூல் ஹெச் (Schedule H) வகை மருந்துகளை சட்டவிரோதமாக விற்கப்படுவதாக காவல் துறை குறிப்பிட்டிருந்தது.




முன்னதாக, போதைப் பொருட்கள் பயன்படுத்தியதற்காகக் கைது செய்யப்பட்ட 10 இளைஞர்களிடம் பெற்றப்பட்ட தகவலின்படி சம்பந்தப்பட்ட ஆன்லைன் தளத்துக்கு காவல் துறை நோட்டீஸ் அனுப்பியிருந்தது. மேலும், ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் பகுதியில் இருந்து மட்டும் இந்த வகையைச் சேர்ந்த 10,000 மாத்திரைகள் போலீஸாரால் கைப்பற்றப்பட்டன. அந்த இளைஞர்கள் வெளி மாநிலங்களில் உள்ள மருந்துகங்களில் இருந்து இந்த மருந்தை மருந்துச் சீட்டு இல்லாமல் வாங்கியுள்ளனர். பின்னர் அவற்றை சேர்த்து வைத்து தமிழகம் முழுவதும் விற்பனை செய்துள்ளனர். இவ்வாறு நாடு முழுவதும் உள்ள இளைஞர்கள் இண்டியாமார்ட் தளம் மூலம் 'ஸ்கெட்யூல் ஹெச்' மாத்திரைகளை வாங்கி பயன்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், இண்டியாமார்ட் நிறுவனத்தின் உரிமையாளர்களுக்கு காஞ்சிபுரம் காவல் துறை முன் ஆஜராகும்படி நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இது குறித்த செய்தியாளர்கள் சந்திப்பில், வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் கூறுகையில், "நாங்கள் அந்த நிறுவனத்தின் சீனியர் விற்பனைப் பிரதிநிதிகளை அழைத்து, நாடு முழுவதும் உள்ள இளைஞர்களில் சிலர் எப்படி இந்தத் தளத்தை தவறாகப் பயன்படுத்தி சட்டவிரோதமாக ஸ்கெட்யூல் ஹெச் வகை மருந்துகளை வாங்குகின்றனர் என்பதை எடுத்துரைத்து, அதனை சமூக அக்கறையோடு தடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினோம்.

எங்களின் விளக்கங்களை ஏற்றுக் கொண்ட இண்டியாமார்ட், நாங்கள் சுட்டிக்காட்டிய 100 மருந்துகள் விற்பனையை தங்களின் ஆன்லைன் தளத்தில் பூரணமாகத் தடை செய்துள்ளதாக அதிகாரபூர்வமாக மெயில் அனுப்பியது. அதன்படி அந்தத் தளத்தின் வாயிலாக அண்மைய நாட்களாக சட்டவிரோத மருந்துகள் விற்பனை ஏதும் நடைபெறவில்லை என்பது எங்கள் கண்காணிப்பில் உறுதியாகியுள்ளது. போதைப் பொருளுக்கு எதிரான எங்களின் நடவடிக்கையில் இது ஒரு மைல்கல்" என்றார்.

காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே.சண்முகம் கூறுகையில், "பிற மாநிலங்களில் உள்ள போலியான மருந்துக் கடைகள், இண்டியாமார்ட் ஆன்லைன் தளத்தில் தங்களை பட்டியலிட்டுக் கொண்டு, அதன் வாயிலாக தமிழக இளைஞர்களுக்கு வலை விரித்து வாட்ஸ் அப் / இன்ஸ்டாகிராம் மூலம் இந்த மருந்துகளை பன்மடங்கு அதிக விலை வைத்து விற்றுள்ளன. தாங்கள் எங்கிருந்து அனுப்புகிறோம் என்பதை காவல் துறை கண்டுபிடிக்காமல் இருக்க போலி முகவரியின் மூலம், கூரியரில் அனுப்பியுள்ளனர்" என்றார்.

விசாரணை அதிகாரியாக இருந்த திருப்பத்தூர் மாவட்ட எஸ்பி ஸ்ரேயா குப்தா கூறுகையில், "இண்டியாமார்ட் தளம் வெளி மாநிலங்களில் உள்ள சில மருந்து நிறுவனங்களால் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் வட சென்னையில் ஓர் இளைஞர் இந்தத் தளத்தில் வாங்கிய மருந்தை ஊசி மூலம் செலுத்திக் கொண்டதில் தான் உயிரிழந்தார்" என்று நினைவுகூர்ந்தார்.

# நீட் தேர்வில் தமிழக அளவில் முதலிடம் பிடித்து நெல்லை மாணவர் சூரிய நாராயணன் சாதனை



தேசிய தேர்வுகள் முகமை நடத்திய இளநிலை மருத்துவ படிப்புக்கான நீட் நுழைவு தேர்வில் பாளையங்கோட்டை புஷ்பலதா வித்யா மந்திர் பள்ளி மாணவர் சூரிய நாராயணன் 665 மதிப்பெண்கள் பெற்று தமிழக அளவில் முதலிடம் பெற்றுள்ளார். இவர் தேசிய அளவில் 27வது இடத்தையும் பெற்றுள்ளார்.

இந்த ஆண்டு நாடு முழுவதும் இளநிலை மருத்துவ படிப்புக்கான நீட் நுழைவு தேர்வை 22 லட்சம் மாணவர்கள் எழுதியிருந்தனர். இத்தேர்வு முடிவுகள் இன்று (ஜூன் 14) வெளியானது. இதில் நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை புஷ்பலதா வித்யா மந்திர் பள்ளி மாணவர் சூரியநாராயணன் 720க்கு 665 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் முதலிடத்தையும், அகில இந்திய அளவில் 27வது இடத்தையும் பெற்றுள்ளார்.

மாணவர் சூரியநாராயணன் சிபிஎஸ்இ 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் 500க்கு 495 மதிப்பெண்களை பெற்றிருந்தார். மேலும், ஜேஇஇ முதன்மை மற்றும் அட்வான்ஸ் தேர்வுகளிலும் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தார். மாணவர் சூரிய நாராயணன் மழலையர் வகுப்பில் இருந்து 12ம் வகுப்பு வரை புஷ்பலதா வித்யா மந்திர் பள்ளியில் கல்வி பயின்றுள்ளார்.

இதுபோல் இப்பள்ளி மாணவர் பிரணவ் நீட் தேர்வில் 633 மதிப்பெண்கள் பெற்று அகில இந்திய அளவில் 191 வது இடத்தையும், மாணவர் அவனிஷ் பிரபாகர் 608 மதிப்பெண்கள் பெற்று அகில இந்திய அளவில் 922 வது இடத்தையும் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். நீட் நுழைவு தேர்வில் சிறப்பிடம் பெற்றுள்ள இந்த மாணவர்களை பள்ளியின் தாளாளர் புஷ்பலதா பூரணன், முதன்மை முதல்வர் புஷ்பவேணி அய்யப்பன், ஆசிரியர்கள் பாராட்டினர்.

# ஈரான் பதிலடியின் தாக்கமும், இஸ்ரேல் பிரதமரின் புதிய மிரட்டலும் நடப்பது என்ன?

டெல் அவிவ் / தெஹ்ரான், ஜூன்.16–

இஸ்ரேல் மீது ஈரான் கடுமையான பதிலடி தாக்குதலை மேற்கொண்ட நிலையில், "ஈரானின் ஒவ்வொரு இலக்கையும் குறிவைத்து தாக்குவோம்" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு புதிய மிரட்டல் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறும்போது, "அயதுல்லா ஆட்சியின் கீழ் உள்ள ஈரான் தேசத்தின் ஒவ்வொரு ராணுவத் தளம், அணுசக்தி ஆராய்ச்சி மையம் என அங்குள்ள எங்களது ஒவ்வொரு இலக்கையும் குறிவைத்து தாக்குவோம். இதுவரை அவர்கள் எதிர்கொண்ட தாக்குதலை காட்டிலும் வரும் நாட்களில் ஈரான் மீது நாங்கள் நடத்த உள்ள தாக்குதலை ஒப்பீடு கூட செய்ய முடியாது. அந்த அளவுக்கு எங்களது தாக்குதல் தீவிரமாக இருக்கும்.

இப்போது தொலை தூரம் சென்று தாக்கவல்ல ஏவுகணைகளை தயாரிக்கும் ஈரானின் திறனை அழிக்கும் வகையில் இஸ்ரேல் ராணுவம் இயங்கி வருகிறது" என்று பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார். இதனிடையே, 'ஈரான் தலைநகர் தெஹ்ரான் பற்றியெரியும்' என எச்சரிக்கை விடுத்த சில மணி நேரங்களிலே, 'ஈரான் முழுவதும் உள்ள பல்வேறு ராணுவத் தளங்களை குறிவைத்து தற்போது தாக்குதல் நடத்தி வருவதாக இஸ்ரேல் ராணுவம் சனிக்கிழமை மாலை செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்தது கவனிக்கத்தக்கது.

அதே வேளையில், இஸ்ரேலின் முக்கிய நகரங்களின் ராணுவ நிலைகளைக் குறிவைத்து ஈரான் நடத்திய பதிலடி தாக்குதலில் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், அந்தச் சேதங்களை வெளியுலகுக்கு தெரியாதவாறு மறைக்கும் வகையில் சர்வேத ஊடகங்களுக்கும், உள்ளூர் ஊடகங்களுக்கும் இஸ்ரேல் அரசு கடும் கெடுபிடிகளைக் காட்டி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், சமூக ஊடகங்கள் வாயிலாக, சேதங்கள் தொடர்பான வீடியோ பதிவுகள் வைரலாகி வருகின்றன.



தாக்குதலும் பதிலடியும்: அணுகுண்டு தயாரிப்பில் தீவிரம் காட்டுவதாக கூறி 'ஆபரேஷன் ரைசிங் லயன்' என்ற பெயரில் ஈரான் மீது இஸ்ரேல் வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் விமானப் படையின் 200 போர் விமானங்கள், ஈரானில் 100 இலக்குகளை குறிவைத்து தாக்குதல் நடத்தின. இதில் ஈரானின் அணுசக்தி தளங்கள் அழிக்கப்பட்டன. இந்தத் தாக்குதலில் 6 அணு விஞ்ஞானிகள், ராணுவ தளபதிகள் 3 பேர் உட்பட 78 பேர் உயிரிழந்தனர்; 320 பேர் காயம் அடைந்தனர்.

முதல்கட்ட தாக்குதலின் தொடர்ச்சியாக, வெள்ளிக்கிழமை மாலையும் இஸ்ரேல் மீண்டும் ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இதில் 200 இடங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. இந்தத் தாக்குதல்களுக்கு பதிலடி தரும் வகையில், இஸ்ரேல் மீது ஈரான் சனிக்கிழமை அதிகாலையில் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தத் தொடங்கியது.

'ஆபரேஷன் ட்ரூ பிராமிஸ்' என்று பெயரிட்டு பதிலடியாக ஈரான் வீசிய ஏவுகணைகள் மூலம் 'அயர்ன் டோம்' வான்பாதுகாப்பையும் மீறி, இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவில் உள்ள ராணுவத் தலைமையகம் தாக்குதலுக்கு உள்ளானது. ஜெருசலேம் உள்ளிட்ட பகுதிகள் மீதும் குண்டுகள் விழுந்தன. இந்த தாக்குதல்களில் 3 பேர் உயிரிழந்ததாகவும், 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இஸ்ரேலின் அனைத்து பகுதிகளும் தாக்குதலுக்கு உள்ளானதாக தகவல்கள் வெளியாகின.

"மத்திய கிழக்கில் தற்போதைய பதற்றத்துக்கு காரணமே ஈரான் தான். அணு ஆயுதங்களை தயாரித்து இஸ்ரேலை அழிக்க ஈரான் திட்டமிடுகிறது. அதனால்தான் நாங்கள் அணு ஆயுதத் தளங்களை குறிவைத்து துல்லிய தாக்குதல் நடத்தினோம். ஆனால், இஸ்ரேலில் மக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கி ஈரான் தொடர்ந்து ஏவுகணை தாக்குதல் நடத்துகிறது" என்று இஸ்ரேல் ராணுவ செய்தி தொடர்பாளர் லெப்டினன்ட் கர்னல் நடாவ் ஷோசானி தெரிவித்தார்.

அதே வேளையில், ஈரான் தலைவர் அயதுல்லா அலி கமேனி, "இஸ்ரேலுடன் போரிட ஈரான் ராணுவப் படைகள் தயார் நிலையில் உள்ளன. ஈரான் மக்கள் அனைவரும் ஈரான் ராணுவத்துக்கு ஆதரவாக உள்ளனர்" என்றார். மேலும், இஸ்ரேலுக்கு ராணுவ உதவிகளை இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் வழங்கினால், ஈரானில் உள்ள அந்த மூன்று நாடுகளின் நிலைகள் மீதும் குறிவைத்து தாக்குவோம் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்தது.

இந்தப் பின்னணியில், "ஈரானின் ஏவுகணை தாக்குதல் தொடரும் பட்சத்தில், அந்நாட்டின் தலைநகரான தெஹ்ரான் பற்றியெரியும்" என இஸ்ரேல் அரசு எச்சரிக்கை விடுத்தது கவனிக்கத்தக்கது.

இந்தியாவின் நிலைப்பாடு என்ன? இதனிடையே ஈரான் உடனான போர் தொடர்பாக இஸ்ரேலை கண்டிக்கும் ஷாங்காங் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) அறிக்கை தொடர்பான விவாதத்தில் இந்தியா பங்கேற்கவில்லை என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது குறித்து இந்தியா வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'பதற்றத்தை தணிக்க பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திர வழிகளை பின்பற்றுமாறு இரு தரப்பினரையும் நாங்கள் வலியுறுத்துகிறோம். சர்வதேச சமூகம் இந்த திசையில் முயற்சிகளை மேற்கொள்வது அவசியம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு: இஸ்ரேல் ஈரான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளதால், இந்தியாவுக்கான பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை சனிக்கிழமை ஒரே நாளில் பேரலுக்கு 6 டாலர் உயர்ந்து 78 டாலரானது. இந்தப் போர் தீவிரமானால் கச்சா எண்ணெய் விலை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

விமான சேவை பாதிப்பு: இஸ்ரேல் ஈரான் இடையிலான போரால் அவற்றின் வான்வெளி மூடப்பட்டுள்ளது. இதனால் விமானங்கள் சுற்றிச் செல்ல வேண்டியிருப்பதால் உலகின் பல விமான நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பல்வேறு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதால் லண்டன், துபாய், அபுதாபி, ரியாத், பிராங்பர்ட் போன்ற விமான நிலையங்களில் ஆயிரக்கணக்கான பயணிகள் சிக்கித் தவிப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

இதனிடையே, இஸ்ரேலில் உள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது. மேலும், ஏர் இந்தியா மற்றும் இண்டிகோ விமான நிறுவனங்கள் பயணிகள் எச்சரிக்கையாக இருக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161